சொல்வதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன். எனவே, மற்ற சங்தேகங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக வேண்டாம் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி சொன்ன அந்தக் கருத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தர்மலிங்கம் சொன்னதில்--, வெளியே ஒரு மென்டல்காரன் இதே கருத்தை கொஞ்ச நாட்களுக்கு முன்பு சொல்லியிருந்தான். ** என்று எல்லாம் சொல்லியிருந்தான். அந்த மென்ட்டல் பேச்சுக்கும், இதற்கும் வித்தியாசம் இல்லாமல் போகும்-- ஆகவே அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதுவே வேண்டாம். அந்த மென்ட்டலுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும். அவனை இன்று பலர் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு ஆடிக்கொண்டிருக்கலாம். ஆனால் அந்த மென்ட்டலுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும்.

வினா எண் 523, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 524, திரு வே. பெரியசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

524—

சோளகனை வனத் துறை செட்டில்மெண்டில் சாலைகள் அமைத்தல்

**24991*—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, சோளகனை வனத் துறை செட்டில்மெண்டில் சாலைகள் புதியதாகப் போட அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 மே 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அந்தியூர் தொகுதி, சோளகனை வனத் துறை செட்டில்மெண்டில் சாலைகள் புதியதாகப் போட அரசுக்குக் கோரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சிறப்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சோளகனை, வனத் துறையைச் சேர்ந்த பாரஸ்டு செட்டில்மெண்டு. இங்கே ஆதிவாசி மக்கள் 2 பகுதியாக குடியிருக்கிறார்கள். சின்ன சோளகனை, பெரிய சோளகனை என்று இருக்கிறது. 1947 ஆகஸ்டு 15-ல் சுதந்திரம் தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் ஆதி வாசி மக்களுக்கு கிடைத்திருக்கிறதா என்று சொன்னால் உண்மையிலேயே இல்லை. ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் தான் பூரண சுதந்திரத்தைப் பெற்று இருக்கிறார்கள். அந்த நிலையில் தான் இந்த ஆதிவாசி மக்கள் இந்த வனத் துறையில் ஒரு பகுதியில் இருக்கிற காரணத்தால் நீங்கள் நிறைய ரோடுகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் போட்டுக்கொடுத்து இருக்கிறீர்கள். பரவலாக பரந்து வாழும் மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதி. ஆகவே, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்வது என்ன என்றால் அந்தப் பகுதியில் செல்வதற்கு சாலை வசதி இல்லை. ஆதிவாசி மக்களுக்கு பள்ளிக்கூடம் கட்டிக்கொடுத்து இருக்கிறோம். அவர்கள் தலைச்சுமையாகத் தான் உணவுப்பொருட்களை எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். ஆகவே, அருள்கூர்ந்து இந்த ஆண்டு 1995-96 பட்ஜெட்டில் இந்த சாலையை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி காப்புக் காட்டினுடைய மத்தியில் அமைந்திருக்கிறது. ஆகவே மண் சாலை மட்டும் தான் அங்கே இருக்கவேண்டுமே தவிர அதிலே மெட்டல் சாலைகள் போட்டு சாலை அமைத்தால் பல்வேறு வனப்பொருட்களைக்

களவாடுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற பணியினுடைய மொத்த மதிப்பீடு 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்பதும் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் அமைக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஏப்ரல் 93-லே அந்த வட பர்கூர் போன்ற பகுதிகள், அங்கே அந்தக் காட்டில் 144 தடை உத்தரவு இருக்கின்ற காரணத்தினாலேதான் அந்தப் பகுதியிலே புதிதாகச் சாலைகள் அமைக்கிற சாத்தியக்கூறுகள் இப்பொழுது இல்லை.

முற்பகல் 10.20

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய சிறப்புமிகு தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இப்பொழுது வீரப்பன் இல்லை. மூடப்பட்ட பகுதியாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அரசுப் பணிகள் அனைத்தையும் முறைப்படியாக அங்கே ஜீவன்தாரா வேலையிலிருந்து அத்தனை வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள்-மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்றபொழுது இது மண் சாலையாகத்தான் போட முடியும் என்று சொன்னார்கள். அந்த சாலையையாவது போட்டுக் கொடுத்து இந்த ஆண்டு-இந்த நடப்பாண்டு, 95-96-லே செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மண் சாலைகள் அங்கே இருக்கின்றன. மலையிலே ஏதாவது அரிப்பு ஏற்பட்டிருந்தாலும்கூட அதைச் சீரமைத்து சிறப்பான முறையிலே மண் சாலைகள் அங்கே அமைத்துத்தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

525—

மார்த்தாண்டம்-பனச்சமூடு சாலையில் பக்கச்சுவர் கட்டுதல்

***20175-திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலுகாவில் மார்த்தாண்டம்-பனச்சமூடு சாலையில் சில இடங்களில் பக்கச்சுவர் கட்டிப் பாதுகாக்க அரசு முன்வருமா?